**கவனிக்க.**- *2009.08.21 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (II *அ*) *மற்றும் பகுதி* II *இல் பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1617 - 2009 අගෝස්තු මස 28 වැනි සිකුරාදා - 2009.08.28**

*1617 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | *1042* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1047* |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வரராரந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, ஓகத்து மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண், பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, புரட்டாதி மாதம் 25 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009, ஆவணி 06.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. புத்தளம் | மகாவெவ | வலஹம்பிற்றிய பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பிற்றிகல் கோரளை தெற்குப் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், புத்தளம். |

8-588

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண், பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, புரட்டாதி மாதம் 25 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009, ஆவணி 06.

**அட்டவணை**

| | மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|---|
| 1. | கேகாலை | மாவனல்ல | மெதபற்று கோரளை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கல்பட கோரளை பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கேகாலை. |

8-589

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, புரட்டாதி மாதம் 18 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009, ஆடி மாதம் 31 ஆந் திகதி.

**அட்டவணை**

| | மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|---|
| 1. | நுவரெலியா | வலப்பன | யட்டிபலாத்த பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வலப்பன பிரிவு விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், நுவரெலியா. |
| 2. | நுவரெலியா | வலப்பன | உடபலாத்த பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வலப்பன பிரிவு விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், நுவரெலியா. |
| 3. | நுவரெலியா | அம்பகமுவ | ஹட்டன்-டிக்கோயா நகர பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், நுவரெலியா. |

8-590

---

## சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு

### உளவளத்துணை உதவியாளர் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல்

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சிலுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **இப்பதவி தொடர்பான சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும் ;

(ii) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பந்தி முதல் 12 ஆம் பந்தி வரை குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் உரியதாகும் ;

(iii) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குகள் ஏற்பாடுகளுக்கும் மற்றும் அரசினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள, முன்னர் வெளியிடப்பட்டுள்ள ஏனைய விதிகள், ஒழுங்குகளுக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

(iv) இந்த நியமனம் 03 வருடங்கள் தகுதிகாண் காலத்தை உள்ளடக்கியுள்ளது.

(v) நியமனம் கிடைக்கப்பெறும் மாவட்டத்தில் ஆகக்குறைந்தத மூன்று வருடங்கள் கடமையாற்றுதல் வேண்டும்.

வெற்றிடம் நிலவுகின்ற மாவட்டங்கள், மொழி ஊடகம் மற்றும் ஆளணி வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | - | தமிழ் மொழி ஊடகம் - ஆளணி வெற்றிடம் - 02 |
| மட்டக்களப்பு | - | தமிழ் மொழி ஊடகம் - ஆளணி வெற்றிடம் - 01 |
| அனுராதபுரம் | - | சிங்கள மொழி ஊடகம் - ஆளணி வெற்றிடம் - 01 |
| பொலன்னறுவை | - | சிங்கள மொழி ஊடகம் - ஆளணி வெற்றிடம் - 01 |
| அம்பாறை | - | சிங்கள மொழி ஊடகம் - ஆளணி வெற்றிடம் - 01 |

2. **சம்பள அளவுத் திட்டம்.**- இப்பதவிகள் தொடர்பாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற பட்டதாரிகளுக்கு பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. எம்/என்/4- 2006 – A இற்கமைவாக ரூபா 15,215- 10×215 – 4×240 – 7×320-15×360-ரூபா 25,965 சம்பள அளவுத் திட்டம் உரியதாகும்.

3. **ஏனைய தகைமைகள்.**- (i) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று அதாவது 2009.09.30 ஆந் திகதி அன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச/மாகாண சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதல்ல).

4. **கல்வித் தகைமைகள்.**- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் ஒன்று (உளவியல் சார்பான விசேட பட்டம் அல்லது பட்ட நெறியில் விடயமொன்றாக உளவியலினை மேற்கொண்டு சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) அத்துடன்

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது பிற அரச அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் உளவளத்துணை சார்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவில் சித்தியடைந்திருத்தல்.
அல்லது

(ii) அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் உளவியல் மற்றும் உளவளத்துணை சார்ந்த ஆகக்குறைந்தத ஒரு வருட டிப்ளோமா பாடநெறியில் சித்தி பெற்றிருத்தல்.

**5. ஆட்சேர்ப்பு முறை.**- நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில், கூடிய புள்ளிகளினைப் பெற்ற விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

**6. விண்ணப்பிக்கும் முறை.**- கீழுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை பிழையின்றி பூரணப்படுத்தி 2009.09.30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக "செயலாளர், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு, 5 ஆம் மாடி, "செத்சிறிபாய", பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். தற்போது அரச சேவையிலுள்ளவர்கள் திணைக்களத் தலைவரின் அத்தாட்சிப்படுத்தலுடன் விண்ணப்பித்தல் வேண்டும். (தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்கு உடன்படுவதாகக் குறிப்பிடுதல் வேண்டும்) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உளவளத்துணை உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் சரியாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

இவ்வறிவித்தலில் இல்லாத விடயமொன்று தொடர்பாகவும், ஆட்சேர்ப்பு அல்லது வெற்றிட எண்ணிக்கையை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் செயலாளருக்கு உரித்துடையதாகும்.

(திருமதி) விஜி. ஜெகராசசிங்கம்,
செயலாளர்,
சமூக சேவைகள் மற்றும் சமூக
நலத்துறை அமைச்சு.

5 ஆம் மாடி,
"செத்சிறிபாய",
பத்தரமுல்லை,
2009.08.10.

அலுவலக உபயோகத்திற்கு

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு**

உளவளத்துணை உதவியாளர் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல்

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் மொழி மூலம் | |
| விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் | |
| அப்பதவிக்கு உரித்தான பிரிவு | |

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (வணக்கத்துக்குரிய/திரு./திருமதி/செல்வி) :-----.
Name with Initials (Rev./ Mr./ Ms.) :-----.

2. முழுப்பெயர் :-----.
Full Name :-----.

3. நிரந்தர முகவரி :-----.

4. தபால் முகவரி :-----.

5. நிரந்தரக் குடியிருப்பு மாவட்டம் :-----.

6. தேசிய அடையாள அட்டை இல. :-----.

7. பால் (ஆண்/பெண்) :-----.

8. (i) பிறந்த திகதி :- ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
(ii) 2009.09.30 ஆந் திகதியன்று வயது :- வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

9. இனம் :-----.

10.விவாகமானவரா/விவாகமாகாதவரா? :-----.

11.பல்கலைக்கழகப் பட்டம் தொடர்பான குறிப்புக்கள் :-

(i) பல்கலைக்கழகம் :-----.
(ii) பட்டமளிப்பு நடைபெற்ற திகதி :-----.
(iii) பொது/விசேடம் :-----.
(iv) பாடம் :-----.
(v) வகுப்பு : 1 ஆம்/2 ஆம்/சாதாரணம் :-----.
(vi) மொழி :-----.

12.ஏனைய கல்வி சம்பந்தமான தகவல்கள்/தொழில் தகைமைகள் இருப்பின் (பட்டப்பின் படிப்பு/டிப்ளோமா) அது தொடர்பான தகவல்கள் -

(i) -----.
(ii) -----.
(iii) -----.

13. மொழித்திறன் (உரிய கூட்டுக்குள் " ✓ " இடவும்)-

| | மிக நன்று | நன்று | சாதாரணம் | பலவீனம் |
|---|---|---|---|---|
| சிங்களம் | ----------- | ----------- | ----------- | ----------- |
| தமிழ் | ----------- | ----------- | ----------- | ----------- |
| ஆங்கிலம் | ----------- | ----------- | ----------- | ----------- |

14. அனுபவம் : -----.

**விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

....................... ஆகிய நான் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எல்லாத் தகவல்களும் சரியானவையென்றும் உண்மையானவையென்றும் உறுதிமொழிகின்றேன். நான் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டோ அல்லது திறமையின்மை காரணமாக கருணை அடிப்படையில் சேவையிலிருந்து ஓய்வு பெறவில்லை எனவும் பதவியை விட்டுச் சென்ற ஒருவர் இல்லையெனவும் பிரகடனப்படுத்துகின்றேன். இங்கு என்னால் தரப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானதென அல்லது பிழையானதென தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு தெரியவந்தால் நான் தகுதியற்றவனாவேன் என்பதையும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின் அது பற்றி தெரியவந்தால் சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தொடர்பாக திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

திரு./திருமதி/செல்வி ............................................................................ என்பவர் இவ்வமைச்சில்/திணைக்களத்தில் நிரந்தர/தற்காலிக/அமைய ஊழியராக சேவையாற்றுகின்றார் எனவும் இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படின் இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியுமெனவும்/முடியாதெனவும் அறியத்தருகின்றேன்.

------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவிப் பெயர் : -----.
அமைச்சு/திணைக்களம் :-----.
திகதி :-----.

8-674

## திருத்தம்

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தில் "கணனித் தரவு பதிவு இயக்குனர்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல்" சம்பந்தமாக 31.07.2009 ஆந் திகதிய 1613 ஆம் இலக்க அரச வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) வில் பிரசுரமான அறிவத்தல் பின்வருவாறு திருத்தம் செய்யப்படுகின்றது :-

விண்ணப்பங்கள் கையேற்கும் இறுதி தினம் 21.08.2009 ஆகத் திருத்தப்படுகின்றது.

எஸ். டி. ஏ. பி. பொரலெஸ்ஸ.
காணி ஆணையாளர் நாயகம்.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 07, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,
கொழும்பு 07.

8-686

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை விஞ்ஞான சேவை

### வகுப்பு II தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2007 (2009)

கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அரச திணைக்களங்களுக்கு எதிரில் காட்டப்பட்டுள்ள இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பதவி வெற்றிடங்களின் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் 1 தொடக்கம் 6 வரை முதலாம் பக்கத்தில் அமையும் வண்ணம் அங்குலம் 8 1/2 × 12 (A4) அளவுத் தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2009.09.25 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடிய வகையில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II இன் பதவிகளுக்கான பரீட்சை" - 2007 (2009) என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

அந்தந்தப் பதவிகளுக்கு வெவ்வேறாக விண்ணப்பங்கள் அனுப்பப்படுதலாகாதென்பதுடன், தமது விண்ணப்ப அறிவித்தலில் காட்டப்பட்டுள்ளவாறு விண்ணப்பிக்கும் பதவிகளை ஒழுங்கு முறையாகக் குறிப்பிடுதல் வேண்டும். உதாரணமாக, ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள உதவிப் பணிப்பாளர், ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பிக்க உத்தேசிக்கும் பரீட்சார்த்தியொருவர் சம்பந்தப்பட்ட பதவிகளுக்குரிய குறியீட்டு இலக்கங்களை (0077, 0078) என்ற முறையில் விண்ணப்பத்தில் "குறியீட்டு இலக்கம்" மற்றும் அட்சரம் எனும் நிரலில் காட்டுதல் வேண்டும்.

| | திணைக்களம் | வெற்றிடமாக உள்ள பதவிகள் | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|---|
| 1 | இலங்கை தேசிய மிருகக்காட்சிச் சாலைத் திணைக்களம் | (1) உதவிப்பணிப்பாளர் | 0011 |
| 2 | அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் | (2) அரசாங்க உதவிப் பகுப்பாய்வாளர் | 0022 |
| 3 | நீர்ப்பாசனத் திணைக்களம் | (3) உதவி மண் இரசாயனவியலாளர் | 0033 |
| 4 | வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் | (4) உதவிப் பணிப்பாளர் | 0044 |
| 5 | தொழில் திணைக்களம் | (5) ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 0055 |
| 6 | இலங்கைப் புகையிரதத் திணைக்களம் | (6) இரசாயனவியலாளர் மற்றும் உலோகவியலாளர் | 0066 |
| 7 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | (7) உதவிப் பணிப்பாளர் | 0077 |
| | | (8) ஆராய்ச்சி அலுவலர் | 0078 |
| 8 | வனப் பாதுகாப்புத் திணைக்களம் | (9) உதவி வன பாதுகாவலர் | 0089 |
| 9 | அளவை தரவளவு சேவைகள் திணைக்களம் | (10) உதவிப் பணிப்பாளர் | 0910 |
| 10 | வளிமண்டலவியல் திணைக்களம் | (11) வளிமண்டலவியலாளர் | 1011 |

*2.* **சேவையில் ஈடுபடுத்துவதற்கான பிரிவுகளும் நிபந்தனைகளும்**.- (i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இந்நியமனமானது மூன்று ஆண்டு கால தகுதிகாண் நிலைக் காலத்தை உடையதாக அமையும்.

(ii) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் இத்தீவின் எப்பாகத்திலாயினும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும். மாகாண அரச சேவையிலும் பணியாற்ற உடன்படல் வேண்டும்.

(iii) அரசாங்க சேவையில் நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 509/7 ஆம் இலக்க மற்றும் 1988, யூன் மாதம் 07 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் இலங்கை விஞ்ஞான சேவை பிரமாணக் குறிப்பில் விதித்துள்ள நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்புக்கு மேற்கொண்டுள்ள அல்லது இனிமேல் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் அமைவாக தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் இலங்கை விஞ்ஞான சேவையில் வகுப்பு II தரம் II இற்கு நியமனம் செய்யப்படுவார்.

(iv) தமக்கு வழங்கியுள்ள பதவியில் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறும் மற்றும்/அல்லது நியமனம் செய்த பதவியில் அல்லது நியமனம் செய்த பிரதேசம் ஒன்றில் கடமைகள் பொறுப்பேற்பதை நிராகரிக்கும் அல்லது அலட்சியப்படுத்தும் விண்ணப்பதாரிகளின் நியமனங்கள் இல்லாதொழிக்கப்படும்.

*3.* **அமைவு மற்றும் மாதச் சம்பள அளவுத்திட்டம்**.-

| | | | |
|---|---|---|---|
| வகுப்பு I | - ரூபா 36,755 | - 17× 1,050 | - ரூபா 53,555 |
| வகுப்பு II | - ரூபா 30,175 | - 8 × 790 | - ரூபா 35,705 |
| வகுப்பு III | - ரூபா 22,935 | - 10 × 645 | - ரூபா 29,385 |

(சுற்றறிக்கை 06/2006 இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பளம் செலுத்தப்படுவதுடன் நியமனத் தினத்திலிருந்து 3 வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையும் நியமனத் தினத்திலிருந்து 6 வருடங்களுக்குள் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையும் அ. நி. சு. இலக்கம் 20/2001 இன்படி சித்தியடைதல் வேண்டும்.)

**குறிப்பு** :

(i) **முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை**.- பின்வரும் பாடங்களைக் கொண்டமைந்த முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(அ) நிதி முறைமைகள்
(ஆ) நிருவாகம்
(இ) திணைக்கள ஒழுங்குவிதிகள்

(ii) **இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை**.- உரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்டுள்ளவாறு எம். எஸ். சீ., எம். பில் அல்லது பீ. எச். டி. போன்ற பட்டநிலைப் படிப்பு பட்டமொன்றில் சித்தியடைதல் வேண்டும்.

*4.* **பதவிகளுக்கான கல்வித் தகைமைகளும் வேறு தகைமைகளும்**.- சகல பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விடயங்களை உறுதிப்படுத்தும் பொருட்டு சாட்சிகளை முன்னளித்தல் வேண்டும் :-

4.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

4.2 நல்லொழுக்கம் உடையவராகவும் சிறந்த உடல் நலம் கொண்டவராகவும் விளங்குதல் வேண்டும் ;

4.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சார்த்திகள் 22 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் (இவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு ஏற்புடைய பதவிகளுக்காக விண்ணப்பம் செய்வதற்கு தகைமைகளை பெறுகின்ற உள்ளக விண்ணப்பதாரிகளுக்காக ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.) இருத்தல் வேண்டும்.

4.4 விண்ணப்ப முடிவுத்திகதியன்று கீழ்க் குறிப்பிடும் கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.5

| திணைக்களம் | தொழில் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் |
|---|---|---|
| 1. தேசிய மிருகக்காட்சிச் சாலைத் திணைக்களம் | 1. உதவிப் பணிப்பாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விலங்கியல் தொடர்பான சிறப்புப் (Honors) பட்டமொன்றைப் பெற்றிருத்தல் |
| | | அல்லது |
| | | (ஆ) இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய பாடங்களுடன் (வகுப்பு I இல் அல்லது வகுப்பு II இல்) பொதுப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |

| திணைக்களம் | தொழில் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் |
|---|---|---|
| 2. அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் | 2. உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இரசாயனவியல் தொடர்பாக வகுப்பு I இல் அல்லது வகுப்பு II இல் விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| | | அல்லது |
| | | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இரசாயனவியல் பற்றிய விசேட பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இரசாயனவியலில் முதுமாணிப் பட்டமொன்றை (எம். எஸ். சீ.) அல்லது கலாநிதிப் பட்டமொன்றைப் (P. H. D.) பெற்றிருத்தல். |
| | | அல்லது |
| | | (இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இரசாயனவியலை பாடமாகக் கொண்டு பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இரசாயனவியல் தொடர்பான எம். எஸ். சி. அல்லது பி. எச். டி. (P. H. D.) அல்லது பட்டநிலைப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 3. நீர்ப்பாசனத் திணைக்களம் | 3. உதவி மண் இரசாயனவியலாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பிரதான அல்லது துணைப் பாடமாக விவசாய இரசாயனவியல் அல்லது இரசாயனவியலுடன் கூடிய விவசாயம் அல்லது விஞ்ஞானம் தொடர்பான விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| | | அல்லது |
| | | (ஆ) இரசாயனவியல் அலல்து விவசாயத்தைப் பாடமாகக் கொண்டு வகுப்பு I அல்லது வகுப்பு II இல் விஞ்ஞான பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். |
| 4. வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் | 4. உதவிப் பணிப்பாளர் | (அ) உயிரியல் அல்லது தாவரவியல் தொடர்பான விசேட விஞ்ஞானப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| | | அல்லது |
| | | (ஆ) தாவரவியல், உயிரியல் என்பவற்றை மேலதிகப் பாடமாகக் கொண்டு விலங்கியல் தொடர்பான விசேட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். |
| | | அல்லது |
| | | (இ) விலங்கியல், தாவரவியல் அல்லது உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்கள் அடங்கலாக முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பில் பொது விஞ்ஞானப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| | | அல்லது |
| | | (ஈ) வனவிலங்குப் பாதுகாப்பு அல்லது வனவிலங்கு முகாமைத்துவம் அல்லது வனவியல் அல்லது சூழல் பாதுகாப்பு தொடர்பான பட்டப்பின் படிப்புப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். |
| | | அல்லது |
| | | (உ) தாவரவியலை அல்லது உயிரியலை மேலதிகப் பாடமாகக் கொண்டு இரசாயனவியல் தொடர்பான விசேட (Special) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| | | அல்லது |

| *திணைக்களம்* | *தொழில்* | *கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்* |
|---|---|---|
| | | (ஊ) தாவர விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், சூழல் விஞ்ஞானம், இயற்கை வளங்கள் ஆகிய பாடங்கள் தொடர்பான விசேட விஞ்ஞான பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| | | *அல்லது* |
| | | (எ) மேலே கூறப்பட்ட பாடங்களுக்கு மேலதிகமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அதற்குச் சமமான பாடங்களில் விசேட விஞ்ஞானமானிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 5. தொழில் திணைக்களம் | 5. ஆராய்ச்சி உத்தியோகத்தர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இரசாயனவியல் தொடர்பான வகுப்பு I அல்லது வகுப்பு II இல் விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| | | *அல்லது* |
| | | (ஆ) இலங்கை இரசாயனவியல் நிறுவனத்தில் அல்லது பெரிய பிரித்தானியாவில் அல்லது அயர்லாந்தில் இரசாயனவியல் தொடர்பான வேதியியல் நிறுவனத்தில் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல். |
| | | *அல்லது* |
| | | (இ) இரசாயனவியல், கைத்தொழில் நஞ்சூட்டல், தொழில்நுட்ப சுகாதாரம் அல்லது சூழல் மாசடைதல் தொடர்பான பிரயோக இரசாயனம் தொடர்பான பட்டநிலைப் பின்படிப்புப் பட்டம் பெற்றிருத்தல். |
| 6. இலங்கைப் புகையிரதத் திணைக்களம் | 6. இரசாயனவியலாளர் மற்றும் உலோகவியலாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மேலதிகப் பாடமாக பௌதீக விஞ்ஞானம் அல்லது தூய கணிதத்துடன் (பௌதீக விஞ்ஞானத்திற்குக் கூடிய கவனம் செலுத்தப்படும்) இரசாயனவியல் பாடத்தில் விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| | | *அல்லது* |
| | | (ஆ) இலங்கை இராசயனவியல் நிறுவனத்தில் அல்லது சம அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் பட்டம்/பட்டய அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல். |
| | | *அல்லது* |
| | | (இ) அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகமொன்றில் பகுப்பாய்வு இரசாயனவியல் அல்லது உலோகவியல் அல்லது பெற்றோலிய இரசாயனவியல் அல்லது இறப்பர் தொழில்நுட்பவியல் பட்டப்பின் படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 7. ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | 7. உதவிப் பணிப்பாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விவசாயம் தொடர்பான பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். |
| | | *அல்லது* |
| | | (ஆ) விவசாயம் தொடர்பான பட்டநிலைப் பின் படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| | | *அல்லது* |

| திணைக்களம் | தொழில் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் |
|---|---|---|
| | | (இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தாவரவியல், உயிரியல் மற்றும் இரசாயனவியல், விலங்கியல், பொருளியல், கணிதம், கேத்திர கணிதம், உயிரியல் இரசாயனவியல் போன்ற பாடங்களில் ஒன்றுடன் வகுப்பு I அல்லது வகுப்பு II இல் விசேட விஞ்ஞான பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| | 8. ஆராய்ச்சி உத்தியோகத்தர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விவசாயம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பின்வரும் பட்டங்களில் ஒன்றைப் பெற்றிருத்தல்.<br>(i) தாவரவியலைப் பிரதான பாடமாகவும் இரசாயனவியல் அல்லது விலங்கியலை மேலதிகப் பாடமாகவும் கொண்டிருத்தல்.<br>அல்லது<br>(ii) கணிதம் பிரதான பாடமாகவும் தாவரவியலை அல்லது விலங்கியலை அல்லது இரசாயனவியலை அல்லது பௌதீகவியலை மேலதிகப் பாடமாகவும் கொண்ட விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(iii) இரசாயனவியலைப் பிரதான பாடமாகவும் தாவரவியல் அல்லது விலங்கியலை மேலதிக பாடமாகவும் கொண்டு விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விவசாயத்திற்கு ஏற்புடையதான பட்டநிலைப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(v) கணிதம். உயிரியல் ஆகிய பாடங்களைக் கொண்டமைந்த பொதுப்பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 8. வனப் பாதுகாப்புத் திணைக்களம் | 9. உதவி வனப் பாதுகாவலர் | (அ) தாவரவியலைப் பாடமாகக் கொண்டு மற்றும் விலங்கியல் அல்லது இரசாயனவியலை மேலதிக பாடமாகக் கொண்டு அல்லது விலங்கியலைப் பாடமாகக் கொண்டு மற்றும் தாவரவியலை மேலதிக பாடமாகக் கொண்டும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வகுப்பு 1 அல்லது வகுப்பு 2 இல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(ஆ) உயிரியலைப் பாடமாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் வகுப்பு 1 அல்லது வகுப்பு 2 இல் விஞ்ஞானப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.<br>அல்லது |

| *திணைக்களம்* | *தொழில்* | *கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்* |
|---|---|---|
| | | (இ) விவசாயம் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட வகுப்பு I அல்லது வகுப்பு II இல் சிறப்புப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல். |
| | | அல்லது |
| | | (ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வனவியல் தொடர்பாக வகுப்பு I அல்லது வகுப்பு 2 இல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| | | அல்லது |
| | | (உ) வனவியல் தொடர்பான பட்ட நிலைப்பின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 9. அளவு தர அளவுச் சேவைகள் திணைக்களம் | 10. உதவிப் பணிப்பாளர் | அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பௌதீகவியல் தொடர்பான விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 10. வளிமண்டலவியல் திணைக்களம் | 11. வளிமண்டலவியலாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பௌதீகவியல் அல்லது கணிதம், கணிதம் தொடர்பான விஞ்ஞானமானி (விசேட) பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| | | அல்லது |
| | | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பௌதீகவியல் மற்றும் கணிதம் ஆகியவற்றுடன் வகுப்பு I அல்லது வகுப்பு 2 இல் விஞ்ஞானமானி பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| | | அல்லது |
| | | (இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வளிமண்டலவியல் அல்லது பௌதீகவியல் தொடர்பான பீ. எச். டி. அல்லது எம். எஸ். சீ/எம். பில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| குறிப்பு:- | (1) பௌதீகவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானமானி பட்டமொன்றைப் பெற்றுள்ளதும் வளிமண்டலவியல் திணைக்களத்தில் 10 ஆண்டு திருப்திகரமான சேவைக்காலத்தை கொண்டுள்ளதுமான இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் அலுவலர்களும் இப் பதவிக்காக விண்ணப்பம் செய்வதற்கு தகைமை பெறுவார்கள் | |
| | (iii) விண்ணப்பதாரி கணிதப் பாடம் தொடர்பாக விஞ்ஞானமானி (விசேட) பட்டத்தைப் பெற்றிருப்பின் அவர் தமது பொதுவான விஞ்ஞான தகவுப் பரீட்சையில் பௌதீகவியல் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். | |

**குறிப்பு**.- தகைமை தொடர்பான உத்தியோகபூர்வமான சான்றிதழை அல்லது அச்சான்றிதழுக்குப் பதிலாக அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு ஆவணத்தை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்திருந்தால் மட்டும் விஞ்ஞான சேவையில் நியமனத்திற்கான தகைமைகளைக் கொண்டுள்ளதாகக் கருதப்படும். அதன்படி அனைத்துப் பரீட்சார்த்திகளும் பதவிக்கான சகல தகைமைகளையும் விண்ணப்பம் முடிவுறும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்தல் கட்டாயமாகும்.

5. பின்வரும் ஆவணங்களை தேவையேற்படும்போது முன்வைக்குமாறு பரீட்சார்த்திகள் பணிக்கப்படுவார்கள் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் (கவனிக்கப்படவேண்டியது : சமயத் தீட்சை சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.) ;

(ஆ) பட்டங்கள் மற்றும் உயர்கல்விச் சான்றிதழ்கள் ;

(இ) நற்சான்றிதழ்கள் இரண்டு (இதில் ஒன்று கல்வி நிறுவனமொன்றின் பணிப்பாளர் விரிவுரையாளர்/பல்கலைக்கழக பேராசிரியர்களிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஈ) தொழில்சார் அனுபவம் அல்லது தொழில்நுட்பத் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைகள் தொடர்பான சான்றிதழ்கள்.

6. (i)விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இலக்கம் 01 தொடக்கம் 06 வரை முதலாம் பக்கத்திலும் 07 தொடக்கம் 11 வரை இரண்டாம் பக்கத்திலும் மிகுதி 03 ஆம் பக்கத்திலும் அமையும் வண்ணம் விண்ணப்பப்படிவத்தை தயார் செய்து கொள்ள வேண்டுமென்பதுடன் சொந்தக் கையெழுத்தில் தெளிவாக நிரப்புதல் வேண்டும். மாதிரி படிவத்திற்கு ஏற்புடையதாக விண்ணப்பப்படிவங்களையும், முழுமை பெறாதவாறு தகைமைகளை குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்களையும் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். மேலும் அவ் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியினை தம் வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைவாக உள்ளது என்பதற்கு பரீட்சார்த்தியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக் கொள்ளும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும்.

(ii) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்படும்போது அது சம்பந்தமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகையில் அறிவித்தலொன்றை வெளியிடும். அறிவிப்பு வெளியிடப்பட்டு 2/3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். உங்கள் வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தினதும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் உறுதிப்படுத்திய படப்பிரதியினையும் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியிடமாயின் அனுமதியட்டை அனுப்பவேண்டிய பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களது கோரிக்கையுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் பயனுள்ளதாகும்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்கான கட்டணம் 300 ரூபாவாகும். விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு முன்னர் எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் வருமான தலைப்பு 4000-20-3-20-13 இற்கு வரவு வைக்கும்பொருட்டு செலுத்துதல் வேண்டும். பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தில் உரிய கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தம் வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். இப்பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும்.

8. இந்த வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) இன் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பான பொது நிபந்தனைகளுக்கு கவனம் கோரப்படுகின்றது.

9. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

10. விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்ட சகல நபர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை நிலையத்தின் மேற்பார்வையாளருக்கு தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரத்தினைச் சமர்ப்பிக்க வேண்டும். தமது அனுமதிப் பத்திரத்தைக் காட்டத் தவறும் பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

அனைத்து பரீட்சார்த்திகளும் கடைப்பிடிக்க வேண்டிய சட்டதிட்டங்கள் இவ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

**குறிப்பு**.- பரீட்சார்த்தியொருவருக்கு அனுமதிப்பத்திரமொன்று வழங்குதல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாகக் கொள்ளவியலாது.

*11.* ***பரீட்சார்த்திகளின் அடையாளம்.***– *பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். இதன்பொருட்டு பின்வரும் சாதனங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-*

*(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஓர் ஆளடையாள அட்டை ;*
*(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு ; (பாஸ்போட்)*

*12.* ***பொய்யான தகவல்களை வழங்குதல்.***– *ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் பரீட்சார்த்தத் தன்மை இப்பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது அதற்குப் பின்னரோ எக்கட்டத்திலும் நிராகரிக்கப்படலாம். பரீட்சார்த்தி அளித்த விபரங்களில் எவையேனும் அவரின் அறிவுக்கு எட்டியளவில் பொய்யானவையெனக் காணப்படின் அல்லது அவர் உண்மை எதனையும் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.*

*13. இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தீர்மானத்தின்படி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.*

*14.* ***பரீட்சைத் திட்டம்.***– *பரீட்சை மொழி மூலம் (விண்ணப்பிக்கும் மொழிமூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது) -*

*(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.*

*(ஆ) பரீட்சார்த்தி தகைமைப் பரீட்சையை எம்மொழி மூலம் எழுதிச் சித்தியடைந்தாரோ அம்மொழி மூலம் அல்லது அரசகரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பிக்கின்ற மொழிமூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.*

*(இ) தகைமைப் பரீட்சையில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் மூலம் பாடங்களில் சித்தியடைந்த பரீட்சார்த்தி ஒருவர் தகைமைப் பரீட்சையில் பெரும்பான்மையான பாடங்களை எந்த மொழியில் எழுதிச் சித்தியடைந்தாரோ அம்மொழியில் அல்லது அரசகரும மொழியில் பரீட்சையை எழுதுதல் வேண்டும்.*

*(ஈ) பரீட்சார்த்தி ஒருவர் பிரதான பாடத்தை ஒரு மொழியிலும் மேலதிக பாடத்தை இன்னொரு மொழியிலும் எடுத்துச் சித்தியடைந்திருப்பாராயின் அவர் பிரதான பாடத்திற்கு விடை எழுதிச் சித்தியடைந்த மொழியில் அல்லது அரசகரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.*

***குறிப்பு.***– (i) *மேற்போந்த (ஆ), (இ) என்பவற்றில் பிரயோகிக்கப்பட்ட "தகைமைப்பரீட்சை" என்னும் சொற்றொடர் அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட பரீட்சை என்பதைக் குறிக்கும்.*

(ii) *பரீட்சார்த்தி பரீட்சையில் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழியில் மட்டுமே விடை எழுதுதல் வேண்டும்.*

(iii) *பரீட்சார்த்தி ஒருவர் தான் விண்ணப்பத்திற் கொடுத்த பரீட்சை மொழியையோ, பாடங்களையோ தரங்களையோ மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.*

(iv) *பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்தி கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்.*

*15.* ***ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.***– (i) *மிருககாட்சிசாலைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உதவி மண் இரசாயனவியலாளர், தொழில் திணைக்களத்தின் ஆராய்ச்சி அலுவலர், உதவி வன பாதுகாவலர் மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் வளிமண்டலவியலாளர் ஆகிய பதவிகளுக்காக அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கின்றவாறு அவரின் பொருட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் எழுத்திலான பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மட்டும் ஆட்சேர்ப்புகள் செய்யப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையில் பரீட்சார்த்திகளின் தகைமைகள் பரிசீலிக்கப்படும்.*

(ii) *பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் உதவிப் பகுப்பாய்வாளர் பதவி, புகையிரத திணைக்களத்தில் இரசாயனவியலாளர், உலோகவியலாளர் பதவிகள், ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளர் மற்றும் ஆராய்ச்சி அலுவலர் பதவிகளுக்காக மேற்படி காட்டியுள்ளவாறு எழுத்திலான பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை என்பவற்றால் நடாத்தப்படும் அமைவு முறையிலான பரீட்சைப் பெறுபேறுகள் என்பவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட திறமையின் ஒழுங்கு முறைப்படி அரசாங்க சேவை ஆணைக்குழுவால் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.*

*(அ) நுண்ணறிவுப் பரீட்சை – 100 புள்ளிகள்*
*ஒரு மணித்தியால வினாத்தாளாகும்*

*(ஆ) பொது வினாத்தாள் – 100 புள்ளிகள்*
*3 மணித்தியால வினாத்தாளாகும்*

16. **பாடத்திட்டங்கள்.-**

(அ) *நுண்ணறிவுப் பரீட்சை.-* ஒரு மணித்தியாலத்திற்கு வரையறுக்கப்பட்ட வினாத்தாளாகும். பரீட்சார்த்தியின் தர்க்கரீதியான நியாயம் காணும் திறனையும் தரப்படும் தகவல்களிலிருந்து நன்கு ஊகித்துணரும் ஆற்றலையும் மதிப்பிடும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இது பல்விருப்ப வினாத்தாளாகும்.

(ஆ) *பொது வினாத்தாள்.-* இது இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

I ஆவது பகுதி - சகல விடயங்களும் அடங்கும் வகையில் விரிவான விஞ்ஞான விடயங்கள் தொடர்பான வினாக்களைக் கொண்டிருக்கும் கட்டமைப்பு முறையிலான வினாத்தாளாகும்.

II ஆவது பகுதி - பொருளாதார, அரசியல் மற்றும் கலைத்துறை போன்ற ஏனைய பொதுவான விடயங்கள் தொடர்பான வினாக்களைக் கொண்டமைந்திருக்கும் கட்டமைப்பு முறையிலான வினாக்களாகும்.

17. நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் செயற்படும் திகதியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

18. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி கூற்றுகளுக்கிடையில் இசைவின்மை ஏதேனும் காணப்படின் சிங்கள மொழி கூற்று வலுவிலிருக்கும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

டி. திசாநாயக்க,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07,
2009.07.07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை விஞ்ஞான சேவை**

**வகுப்பு II தரம் II இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2007 (2009)**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :----. சுட்டெண்

சிங்களம் - 2
தமிழ் - 3, ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்) (அலுவலக உபயோகத்திற்கு)

விண்ணப்பம் செய்யும் பதவி/பதவிகள் :-

| திணைக்களம் | பதவி | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| | 1.<br>2.<br>3.<br>4. | |

01. விண்ணப்பதாரரின் பெயர் :----.

1.01 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்) :----.
1.02 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
1.03 முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்) :----.

02. முகவரி :----.

2.1 அனுமதி அட்டைகளை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கிலத்தில்) :----.
2.2 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

03. பால் :----.

ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

04. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

05. வயது :----.
5.1 பிறந்த திகதி :- ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

5.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

06. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :----.
விவாகமாகாதவர் -1/விவாகமானவர் - 2

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

07. தகைமைகள் :-

7.1 கல்வித் தகைமைகள் :-
(சித்தியடைந்துள்ள பரீட்சைகள், பட்டங்கள், வகுப்பு, பாடங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்கள் என்பவற்றை குறிப்பிடவும்)

| பரீட்சை/பட்டம் | வகுப்பு | ஆண்டு | பாடங்கள் | பல்கலைக்கழகங்கள்/ நிறுவனம் |
|---|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | | | | |

7.2 தொழிற்றகைமைகள் :----.

08. சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை :----.
(1) சிங்களம் :----.
(2) தமிழ் :----.
(3) ஆங்கிலம் :----.

09. பாடசாலையை விட்டு விலகிய பின் செய்த தொழில் மற்றும் பெற்றுக்கொண்ட பயிற்சி பற்றிய விபரங்கள் (சேவையில் சேர்ந்த, சேவையை விட்டு விலகிய திகதிகளையும் விலகியதற்கான காரணங்களையும் குறிப்பிடுக) :----.

10. தற்போது வகிக்கும் பதவியின் விபரங்கள் :----.

(அ) பதவி :----.
(ஆ) திணைக்களம்/நிறுவனம் :----.
(இ) நியமனத் திகதி :----.
(ஈ) நிரந்தரம்/ஓய்வூதிய உரித்துடையது/ஓய்வூதிய உரித்தற்றது/தற்காலிகமானது என்பதைக் குறிப்பிடுக :----.

11. நீதிமன்றமொன்றில் ஏதேனும் குற்றப்பாதகச் செயலுக்காகக் குற்றவாளியாக்கப்பட்டிருந்தால் அக்குற்றம் என்ன என்பதையும் அதற்குக் கிடைத்த தண்டனை என்ன என்பதையும் குறிப்பிடுக :----.

12. காசுப்பற்றுச்சீட்டைக் கழறாதவாறு நன்கு ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்ளுதல் உபயோகமாகும்.)

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்தப்பட்ட அலுவலகம் :----.
திகதி :----.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவையெனவும் நான் இத்தால் உறுதி கூறுகின்றேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையாவை என தெரிவுசெய்யப்பட முன் அறிய நேர்ந்தால் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும், நியமனம் பெற்ற பின் அந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சகல திட்டங்களுக்கும் நான் கீழ்ப்படிவேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில் இருப்பவரெனில் திணைக்களத் தலைவரின் அறிக்கை :**

மேற்போந்த 12 ஆம் பந்தியில் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை எனவும்/கீழ்க்காணுமாறு திருத்தப்பட வேண்டும் எனவும் அவரது வேலையும் நடத்தையும் ........................................ எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன். தற்பொழுது அவர் வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்கலாம்/ விடுவிக்க முடியாது.

----,
திணைக்கள/நிறுவன தலைவரின் கையொப்பம்.

பதவி :----.
திகதி :----.

8 - 557

---

## ஆரம்ப வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2009 செத்தெம்பர்

1991.05.17 ஆந் திகதியும் 662/11 ஆம் இலக்கமும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக்கோவையின் 7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் 11 ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும், பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்பும் தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சை 2009.09.27 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் பிரவேசப் பத்திரத்துடன் அனுப்பி வைக்கப்படும்.

2. **தகைமைகள்.**- இதுவரை இப்பரீட்சையைப் பூரணப்படுத்தாத ஆரம்ப தரத்தின் வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் மட்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

3. **விண்ணப்பங்கள்.**- இச்சுற்று நிரூபத்தில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று விண்ணப்பதாரர்களினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் நிறுவனத் தலைவரின் மூலம் கொழும்பு - 10, இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, சுவசிரிபாய கட்டிடத்தில் பணிப்பாளர் (பரீட்சை) அவர்களுக்கு 2009.09.11 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட ரூபா 30.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9" × 4" அளவுள்ள கடித உறையொன்று அனுப்ப வேண்டும். (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).

4. **பரீட்சைக்கட்டணம்.**-

(i) முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை பெறுமதி நீக்கம் செய்தல் வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படுத்தற்கோ அனுமதிக்கப்படமாட்டாது.

5. **பரீட்சைக்கு அனுமதிக்கப்படுதல்**.-

(i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை ;
(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(இ) சாரதி அனுமதிப்பத்திரம் ;
(ஈ) கடவுச்சீட்டு.

(iii) தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக்கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சையினை மேற்கொள்ள முடியும். (சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி www.health.gov.lk)

6. **பரீட்சைத்திட்டம்**.- இப்பரீட்சை மூன்று எழுத்து மூல வினாப்பத்திரங்களையும் சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சையொன்றையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக் கொள்ளலாம்.

7. **பரீட்சை பாடத்திட்டம்**.-

7.1 ***எழுத்துப் பரீட்சை***

7.1.1 தாபன விதிக்கோவை
08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். நேரம் - (02 மணித்தியாலம்) - மொத்தப்புள்ளிகள் 100

**பாடவிதானம்** :-

(i) தாபனவிதிக்கோவை-
(அ) I ஆம் பிரிவு II, III, V, VI, VII, VIII, IX, XI, XII, XIII, XV, XXIV, XXV, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII, XXXIII அத்தியாயங்கள்.
(ஆ) II ஆம் பிரிவு XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.
(ii) சுகாதார சேவைத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்.
(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகள்.

7.1.2 வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் நேரம் :- (1 1/2 (மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.
07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**பாடவிதானம்**
சுகாதாரக் கைநூல்
I ஆம் பிரிவு - வைத்திய சேவை
II ஆம் பிரிவு - இரசாயணகூட சேவை

7.1.3 கணக்கியல்.-
07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் - (காலம் : 02 மணித்தியாலம்) - மொத்தப்புள்ளிகள் 100.

பாடவிதானம்.-
(i) நிதிப்பிரமானம் - I ஆம் பிரிவு
I ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
II ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
III ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

IV ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
V ஆம் அத்தியாயம் - 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்
VI ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
VII ஆம் அத்தியாயம் - 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்

(ii) சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்.

(iii) சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைநூலில் நிதி தொடர்பான பந்தி.

(iv) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப்பிரமானம்.

7.2 சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சை.- சிங்களம்/தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் கொழும்பில் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். மொத்தப்புள்ளிகள் 100. தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும்பொழுது மேலோங்கும் நிகழ்வுகளின் பொருட்டு சிங்களத்தில் அல்லது தமிழ் மொழியில் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல்.

8. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தை உங்கள் பிரிவில்/விசேட செயற்பாட்டுக் குழுவில்/நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்கள் www.health.gov.lk எனும் இணைத்தளத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். (The results of the Examination hold in March 2009 are due to be issued before 15th August 2009)

ஐ. ரீ. வீரசிங்க,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் 02),
சுகாதார செயலாளர் சார்பாக.

சுகாதார போஷணை நலன்னோம்பு அமைச்சு,
'சுவசிரிபாய',
385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2009.08.12 ஆந் திகதி.

| அலுவலகப் பிரயோகத்தின் பொருட்டு |
|---|
| |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்கான திணைக்களப் பரீட்சை - 2009 செத்தெம்பர்**

(Departmental Examination for Preliminary Grade Medical Officers & Dental Surgeons 2009 September)

01. (அ) (i) விண்ணப்பதாரரின் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்.) :----.

(ii) விண்ணப்பதாரரின் பெயர் (ஆங்கில கெபிடல் எழுத்தில் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்) :----.

| | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :----.

(iv) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில கெபிடல் எழுத்தில்) :----.

| | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) அலுவலகப் பெயர் (வைத்திய உத்தியோகத்தர்/பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்) :----.

(ii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :----.

(iii) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

2. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூட்டினுள் ("✓") அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் "X" குறியை இடவும்.

| | | | |
|---|---|---|---|
| தாபனவிதிக்கோவை | | வைத்தியசாலைகள் மருந்துச் சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் | |
| கணக்கியல் | | | |
| சிங்களம் வாய்மொழி | | தமிழ் வாய்மொழி | |

3. (அ) தற்பொழுது சேவையாற்றும் இடம் :----.

(ஆ) அதற்குரிய மாவட்டம் :----.

(இ) தங்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக்கூடிய மிகவும் அண்மையிலுள்ள தாதியர் பயிற்சிக்கல்லூரி :----.

(ஈ) கீழ்வரும் பரீட்சை நிலையங்களுள் விரும்பிய பரீட்சை நிலையம் : (தெரிவு செய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்) பொருத்தமான கூட்டினுள் சரி ("✓") அடையாளமிடுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | | கந்தானை | | அம்பாந்தோட்டை | | அம்பாறை | |
| களுத்துறை | | காலி | | பதுளை | | | |
| குருநாகல் | | அனுராதபுரம் | | இரத்தினபுரி | | | |
| கண்டி | | மட்டக்களப்பு | | யாழ்ப்பாணம் | | | |

(ஈ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9" x 4" அளவுள்ள ரூபா 30.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறையொன்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(உ) (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :----.

(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில கபிடல் எழுத்தில்) :----.

4. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :----.

5. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீர்களா? :----.

(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? :----.

| முத்திரைக் கூடு |
|---|

6. விண்ணப்பதாரரின் உறுதியுரை :-

எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில்-

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவைகளெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாக என்ற படியினால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/முதன் முறை அல்லாதபடியால் ரூபா .......... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதார சேவைத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்துசெய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் அமைவேன் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்வி ............................................. என்பவரை நான் நன்றாக அறிவதுடன், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/அல்லாத படியால் ரூபா ............ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/முத்திரை ஒட்டவேண்டியதில்லை எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

**பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்வி ......................................... என்பவர் வைத்திய உத்தியோகத்தர் ஒருவர்/பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது பிரிவில்/இயக்கத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவனுக்கு/அவளுக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட
இயக்கத் தலைவரின் கையொப்பம்.
(முத்திரை இடப்படுதல் வேண்டும்.)

திகதி :----.

(*தேவையற்றனவற்றைக் கீறிவிடவும்).

8-660

---

**அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களை வகுப்பு 1 இற்கு தரமுயர்த்தும் பரீட்சை - 2009**

அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையில் வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்கான தகவுப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகள் மூலம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2009, திசெம்பர் மாதம் நடாத்தப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2.0 அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையில் வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்காக இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வருமாறு :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அனுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

மேற்படி ஏதேனுமோர் நிலையத்திற்காக போதியளவு பரீட்சார்த்திகள் எண்ணிக்கை இல்லாவிட்டால் அந்நிலையம் இரத்துச்செய்யப்படலாம் . விண்ணப்பிக்கும் நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3.0 (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது அவர் அப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்ளுதல் அல்ல என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. இச் சட்டங்களை மீறினால் அவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படுகின்ற தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

4.0 இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(i) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் பத்து (10) வருட முனைப்பான சேவைக் காலத்தையும், அத்திகதியில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக்காலத்தையும் பூர்த்தி செய்துள்ள அலுவலர் ஒருவராதல்.

(ii) அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களுக்காக நடாத்தப்படுகின்ற வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

**குறிப்பு**.- இப்பரீட்சை நடாத்தப்படுகின்ற திகதி, பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்தி ஒருவர் சேவையில் வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்காக தகைமை அடைந்த திகதியாக கருதப்படும். மேற்படி தகைமைகள் இன்றி பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தி அடைகின்ற அலுவலர்கள் வகுப்பு I இற்கு தரமுயர்வு பெற தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.

5.0 பரீட்சைத்திட்டம்.- பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கிய எழுத்தினாலான ஒரு தகவுப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

| | பாடம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| (i) | தாபன நடைமுறைகள் | 1 1/2 மணித்தியாலம் | 100 |
| (ii) | அரசநிதி முகாமை | 1 1/2 மணித்தியாலம் | 100 |
| (iii) | விடய ஆய்வு | 1 மணித்தியாலம் | 100 |
| (iv) | பொது வினாத்தாள் | 1 மணித்தியாலம் | 100 |
| | மொத்தம் | | 400 |

தாபன நடைமுறைகள்.- தாபன விதிக்கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் பிரயோக அறிவு எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும் :-

பகுதி I - சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் - 08 வினாக்கள் (25 புள்ளிகள்)
பகுதி II - பகுதி கட்டமைப்பு முறையிலான 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

**அரச நிதி முகாமை** :

(அ) நிதி ஒழுங்கு விதி பற்றிய பிரயோக அறிவு
(ஆ) கணக்காய்வு பற்றிய அடிப்படை அறிவு
(இ) அடிப்படை வங்கிகள் தொடர்பான அனுபவம்
(ஈ) களஞ்சியப்படுத்தல் பற்றிய அடிப்படை அறிவு ஆகியன தொடர்பாக பரீட்சித்தல் இவ்வினாத்தாளின் நோக்கமாவதுடன் இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்-

பகுதி I - சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் - 08 வினாக்கள் (25 புள்ளிகள்)
பகுதி II - பகுதி கட்டமைப்பு முறையிலான 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

**விடய ஆய்வு**.- அலுவலக நிர்வாகம் பற்றிய ஒரு பிரச்சினைக்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை ஆராயுமுகமாக வடிவமைக்கப்பட்ட பல் விருப்பு சுருக்க விடைகள் மற்றும் பகுதிக்கட்டமைப்பு முறையிலான கட்டுரை வினாத்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும். கற்கைக்காக விடயங்கள் வழங்கப்படுவதுடன் விடையளிக்க வேண்டிய வினாக்கள் பின்குறிப்பிட்டுள்ளவாறாகும் :-

பகுதி I - பல்விருப்பு வினாக்கள் - 05 வினாக்கள் (05 புள்ளிகள்)
பகுதி II - சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் - 05 வினாக்கள் (05 புள்ளிகள்)
பகுதி III - பகுதிக்கட்டமைப்பு முறையிலான 05 வினாக்கள் (90 புள்ளிகள்)

**பொது வினாத்தாள்**.- உள்நாட்டு வெளிநாட்டு, நடப்பு விவகாரங்களில் விண்ணப்பத்தாரரது பொது அறிவை பரீட்சிப்பது இதன் நோக்கமாகும். இவ்வினாத்தாள் 03 பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்விருப்பு வினாக்கள் - 32 வினாக்கள் (16 புள்ளிகள்)
பகுதி II - வழங்கப்படும் 04 தலைப்புக்களில் 02 இற்கு சிறுகுறிப்பு எழுதுதல் வேண்டும். (36 புள்ளிகள்)
பகுதி III - வழங்கப்படும் கட்டுரை முறையிலான 04 வினாக்களில் 02 இற்கு விடையளித்தல் வேண்டும். (48 புள்ளிகள்)

**குறிப்பு**.- (i) பரீட்சார்த்திகள் சேவையில் சேர்ந்த மொழியிலே அல்லது வேறு அரச கரும மொழியொன்றில் இவ்வினாப்பத்திரங்களுக்கு பதில் எழுத வேண்டும்.

(ii) இப்பரீட்சையில் சித்தி அடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தபட்சம் நூற்றுக்கு 40 வீத (40%) புள்ளிகளும் 160 அல்லது அதற்கு கூடிய மொத்தப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6.0 பரீட்சை பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படுவதுடன், பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7.0 விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் இம் மாதிரிப் படிவ உருவில் தமது விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்து தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2009, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம்" ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும். அவ்வாறு விண்ணப்பங்களை அனுப்பும்போது திருப்திகரமான சேவை பற்றிய சான்றிதழ் ஒன்றையும் அதில் உள்ளடக்க வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் எல்லா அம்சங்களிலும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதிலும் தன்னால் சேவைச் சான்றிதழில் கையொப்பம் இடப்பட்டுள்ளதென்பதிலும் திணைக்களத் தலைவர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும். பரீட்சை ஆணையாளரிடம் விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னராக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8.0 **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்டுள்ள ஓர் ஆவணத்தை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் படி இரத்துச் செய்யப்படலாம்.

9.0 **விண்ணப்பப்பத்திரங்கள்**.- இலக்கம் 1.1 இலிருந்து 1.9 வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் "ஏ4" அளவிலான ஒரு தாளில் விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ள வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சின் மூலம் தயாரித்துக்கொள்ளலாம் எனினும் அதைப் பரீட்சார்த்தி சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்யவேண்டும். மாதிரி விண்ணப்பத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமைபெறாத தகவல்களை குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஏற்புடையதாகவுள்ளதா என்பதைப் பற்றி பரீட்சார்த்தியே பொறுப்புக் கூறுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம் வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை எனினும் அடுத்த தடவைகளின் போது அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றுவதாயின் ரூபா 90 பெறுமதியான முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் அவற்றை உரியவாறு பெறுமதி நீக்கம் செய்யவேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக்கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

உரியவாறு விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து உரிய திகதிக்கு முன்னர் அவ்விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசியுடன் அச்சிடப்பட்ட அனுமதி அட்டையையும் அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டையின்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களிடம் அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு

பத்திரிகை அறிவிப்பொன்று இலங்கை பரீட்சை திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதி, பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் கொழும்புக்கு வெளிப் பிரதேசமாயின் பெக்ஸ் இலக்கம் என்பவற்றை குறிப்பிட்ட கோரிக்கை கடிதம் ஆகியவற்றை வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் மிகப் பயனுள்ளதாகும்.

10.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாண செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

11.0 அரச கரும மொழிக் கொள்கை நோக்கத்தின் பொருட்டு எல்லா விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பங்களை அரச கரும மொழியில் தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அவற்றை அம்மொழியிலேயே நிரப்ப வேண்டும்.

12.0 இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

பி. பீ. பீ. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு,
2009, ஒகத்து மாதம் 12 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு I இற்கு தரமுயர்த்தும் பரீட்சை - 2009**
**Examination for Promotion of Officers in Class II of Public Management Assistants' Service to Class I - 2009**

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :-
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| | |

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2.0 பிரகாரம் நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரமும் நகர இலக்கத்தையும் குறிப்பிடவும்)

1.0 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்கள் இறுதியில் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)
உதாரணம் :- SUNIL, A. B.

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்கள் இறுதியில் :----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)

1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.5 நீங்கள் அரச சேவையில் சேர்ந்த பின் உங்களின் பெயர் மாற்றப்பட்டுள்ளதா? :----.
ஆமெனில் முன்னைய பெயரை குறிப்பிடவும் :----.

1.6 சேவை நிலையமும் முகவரியும் :----.

1.6.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)

1.6.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.7 பால் :-
பெண் - 1
ஆண் - 0

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1.8 பிறந்த திகதி :- ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

1.9 தேசிய அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

2.0 தற்போது வகிக்கும் பதவி :----.

2.1 பதவி :----.

2.2 நியமனக் கடித இலக்கமும் திகதியும் :----.

2.3 குறித்த சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலராக நியமனம் பெற்ற திகதி :----.

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

2.4 நீங்கள் சேவைக் காலத்திற்குள்ளான எல்லா சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளீர்களா? :----.

இல்லாவிட்டால் விபரங்களைக் குறிப்பிடவும் :----.

2.5 நீங்கள் எத்தகையதுமான ஒரு தண்டனை/தண்டனைகளைப் பெற்றிருப்பின் அது பற்றி சுருக்கமாக குறிப்பிடவும் :----.

2.6 நீங்கள் தற்போது ஒரு கூட்டுத்தாபனத்தின் அல்லது நியதிச்சட்ட சபையின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்தால் அது பற்றிய விபரங்கள் :----.

2.7 நீங்கள் வெளிநாட்டுத் தொழில் ஒன்றுக்காக அல்லது வேறு ஏதேனும் அலுவலுக்காக சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்தால் அது பற்றிய விபரங்கள் :----.

3.0 3.1 நீங்கள் முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுகிறீர்களா? :----.

3.2 பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றாவிட்டால் ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :----.

3.3 முத்திரைக்கூடு :----.

| நீங்கள் முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றாவிட்டால் ரூபா 90 பெறுமதியான முத்திரைகளை இங்கு ஒட்டி விடவும். |
|---|

4.0 விண்ணப்பதாரரின் கூற்று

(1) மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய அளவில் உண்மையானவை எனவும்,

(2) அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் உள்ள அலுவலர் என்றும் ...... ஆந் திகதி நான் அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இற்கு நியமனம் பெற்றேன்என்றும்.

(3) 2009, செத்தெம்பர் 28 ஆந் திகதி அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் 10 வருடங்கள் முனைப்பான சேவைக்காலம் மற்றும் 05 வருட திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ளேன் என்றும்,

(4) நான் முதற் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்றுகின்றேன் என்றும்/பரீட்சைக் கட்டணத்திற்கான பெறுமதியுடைய முத்திரைகள் இங்கு ஒட்டப்பட்டுள்ளன என்றும் பயபக்தியுடன் உறுதிப்படுத்துகிறேன்.

இங்கு தரப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது பிழையானது எனத் தெரியவருமாயின் எனக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் அறிவேன். மேலும் பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைந்தொழுக உடன்படுகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.
(அடிக்குறிப்பை பார்க்கவும்)

திகதி :----.

**குறிப்பு**.- (1) அரச முகாமை உதவியாளர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு முன்னர் வகித்த பொது எழுதுநர் சேவை அல்லது அதனோடிணைந்த சேவைகளின் வகுப்பு II/ II "அ" வின் சேவைக்காலத்தை அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இன் சேவைக் காலத்தை கணிப்பீடு செய்யும் போது உரியதாகக் கொள்ள வேண்டும்.

(2) திணைக்களத் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

***கையொப்பத்தை சான்றுப்படுத்தல்.***- எனது அலுவலகத்தின் அலுவலர் திரு./திருமதி/செல்வி ........................ என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் ................ ஆந் திகதி என் முன்னிலையில் இதில் கையொப்பம் இட்டார் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

-----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பமும்,
உத்தியோகபூர்வ முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

***திணைக்களத் தலைவரின் சான்றுரை***

(1) திரு./திருமதி/செல்வி .................................. என்பவர் 2009 ................................. மாதம் ......... ஆந் திகதியில் அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் 10 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர் என்றும் ................. ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்படி இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை உடையவர் என்றும்,
(2) அவரது சுயவிபரக் கோவையின் படி வகுப்பு II இன் நியமனக் கடிதத்தின் இலக்கம் ................................ (நியமனக் கடிதத்தின் இலக்கத்தை குறிப்பிடவும்) என்றும்
(3) அவர் விண்ணப்பத்தின் 1.0 முதல் 4.0 வரையுள்ள பந்திகளில் தரப்பட்டுள்ள விபரங்கள் செவ்வை பார்க்கப்பட்டது என்றும் அவை சரியானவை என்றும்
(4) அவர் முதற் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்றுகிறார் என்றும்/பரீட்சைக்குரிய முத்திரைகள் இங்கு ஒட்டப்பட்டுள்ளன என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

(தேவையற்ற சொற்களை கீறிவிடவும்).

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

*8-687*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.